ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2299/02 – 2022 සැප්තැම්බර් මස 26 වැනි සඳුදා – 2022.09.26

*2299/02 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2014, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1879/08 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 236 ஆம் இலக்க கட்டளையின் துண்டு A எனக் குறிப்பிட்டுள்ள காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் 1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும்
காணி அமைச்சர்.

எனது இல. : *4/3/13/2011/*CA*/302.*
பிர. செய. இல. : MRT/LND/ACQUI/L/01/3920
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. *1200/6*
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2022,* செத்தெம்பர் *20.*

### அட்டவணை I

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில், மாத்தறை கடவத் சதர சிறு பிரிவில், பிரிவு இல. 419ஏ ஏதுாவ, மதுருதுாவ கிராம அலுவலர் பிரிவில், கொடகம கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.12.29 ஆந் திகதிய மாற 2620 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாகக் காட்டப்பட்டுள்ள 1.0916 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட கல்தொல்ல ஆம்ஸ்ட்ரோன் பங்கலாவத்தை எனும் காணித் துண்டின் எல்லை :

**01. துண்டு இல. 1 - கல்தொல்ல ஆம்ஸ்ட்ரோன் பங்கலாவத்தை - விஸ்தீரணம் : சுமார் 1.0916 ஹெக்டயார்**

வடக்கு : லலித் விஜேசேகர மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் எட்டம்பகஹதெனிய கும்புர மற்றும் கால்வாய் ; கிழக்கு: கால்வாய், லலித் விஜேசேகர உரிமை கோரும் வரத்தெனிய கும்புர மற்றும் சிறியாவதி மனம்பேரி மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் வரத்தெனிய கும்புர ; தெற்கு : சிறியாவதி மனம்பேரி மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் வரத்தெனிய கும்புர மற்றும் பந்துல ஏபா உரிமை கோரும் கல்தொல்ல ; மேற்கு: பந்துல ஏபா உரிமை கோரும் கல்தொல்ல மற்றும் லலித் விஜேசேகர மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் எட்டம்பகஹ தெனிய கும்புர.

EOG *09 - 0296*


1A – G 37615 – 19 (2022/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*